# ஒருங்கிணைந்து ராணுவத் தளவாடங்கள் உற்பத்தி

## இந்தியா–இத்தாலி ஒப்புதல்

**புது தில்லி, ஏப். 30:** ராணுவத் தளவாடங்களை ஒருங்கிணைந்து உற்பத்தி செய்வதற்கான தொழில் விதிகளை வகுக்க இந்தியாவும் இத்தாலியும் வியாழக்கிழமை ஒப்புக்கொண்டன.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இத்தாலி பாதுகாப்புத் துறை அமைச்சர் கைடோ க்ரோசெட்டோவை சந்தித்து பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆலோசனை மேற்கொண்ட பிறகு இதில் உடன்பாடு ஏற்பட்டது.

இதுதொடர்பாக ராஜ்நாத் சிங் வெளியிட்ட எக்ஸ் தளப் பதிவில், 'மேற்காசிய விவகாரம் உள்பட பல்வேறு சர்வதேச விவகாரங்கள் குறித்து இத்தாலி பாதுகாப்புத் துறை அமைச்சர் கைடோ க்ரோசெட்டோவுடன் விவாதித்தேன்.

தற்சார்பு இந்தியா முன்னெடுப்பு மற்றும் இத்தாலியின் பாதுகாப்பு ஒத்துழைப்பு முன்னெடுப்பின் கீழ் ராணுவத் தளவாடங்களை ஒருங்கிணைந்து உற்பத்தி செய்வதற்கான தொழில் விதிகளை வகுப்பது தொடர்பாக இருவரும் ஆலோசித்தோம்.

இருநாட்டு ராணுவங்களின் கூட்டுசெயல்பாடுகளை அதிகரிக்கும் வகையில் இருதரப்பு ராணுவ ஒத்துழைப்புத் திட்டம் 2026-2027 தொடர்பாகவும் கலந்துரையாடினோம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாட்டு அமைச்சர்களின் ஆலோசனையில் குருகிராமில் உள்ள தகவல் ஒருங்கிணைப்பு மையம்-இந்திய கடல் பிராந்தியம் மூலமாக மேற்கொள்ளப்படும் தகவல் பரிமாற்றமும் இடம்பெற்றதாக பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

ராஜ்நாத் சிங்கை சந்திப்பதற்கு முன்பாக தேசிய போர் நினைவகத்தில் வீரமரணமடைந்த ராணுவ வீரர்களுக்கு கைடோ க்ரோசெட்டோ மரியாதை செலுத்தினார்.

அதைத் தொடர்ந்து முப்படைகளின் அணிவகுப்பை அவர் பார்வையிட்டார்.



இந்தியா வந்துள்ள இத்தாலி பாதுகாப்புத் துறை அமைச்சர் கைடோ க்ரோசெட்டோவை சந்தித்த மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்.

**KPR IAS Academy**
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# பாலியல் வன்கொடுமையில் பாதிக்கப்பட்ட பெண்கள் கருக்கலைப்பு செய்ய சட்டத் திருத்தம்

## மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் யோசனை

**புது தில்லி, ஏப். 30:** பாலியல் வன்கொடுமையில் பாதிக்கப்பட்ட பெண்கள் கருக்கலைப்பு செய்ய ஏதுவாக சட்டத் திருத்தம் கொண்டு வருவது குறித்து பரிசீலிக்கும்படி மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் யோசனை தெரிவித்துள்ளது.

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு கருவுற்ற சிறுமியின் கருவைக் கலைப்பது தொடர்பான வழக்கை கடந்த 24-ஆம் தேதி விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.வி. நாகரத்னா, உஜ்ஜல் புயான் அமர்வு, சுமார் 30 வார கால கருவைக் கலைக்க 15 வயது சிறுமிக்கு அனுமதியளித்து உத்தரவிட்டது. இந்நிலையில், எய்ம்ஸ் சார்பில் உச்சநீதிமன்றத்தில் அந்தத் தீர்ப்பை தள்ளுபடி செய்யக் கோரி சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு, உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு முன்பு வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது எய்ம்ஸ் சார்பில் வாதாடிய கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா பாட்டீ, 'சிறுமியின் வயிற்றில் இருக்கும் கரு, தற்போது குழந்தையாக வளர்ந்துள்ளது. அந்தச் சிறுமிக்கும் பல்வேறு உடல் நல பிரச்னைகள் உள்ளன. அவளால் மீண்டும் கரு உண்டாக முடியாது. பிறக்கும் குழந்தையை யாருக்கும் தத்து கொடுக்க முடியும். அந்தக் கருவைக் கலைப்பது சாத்தியமில்லை' என்றார்.



இதைக் கேட்டுவிட்டு நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு: பாலியல் வன்கொடுமை மூலம் வயிற்றில் உருவாகும் கருவைக் கலைக்க குறிப்பிட்ட காலக்கெடுவை நிர்ணயிக்க முடியாது. இந்த வழக்கு சிறுமி தொடர்புடையது. அவர் தற்போது கல்வி பயில வேண்டும். ஆனால் நாம் (எய்ம்ஸ்) அவர் தாயாக இருக்க வேண்டும் என நினைக்கிறோம். பாதிக்கப்பட்ட சிறுமியின் வேதனையை கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்.

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு, அந்த சம்பவம் வாழ்நாள் முழுவதும் வடுவாக இருக்கும். கருவைக் கலைக்க அனுமதிக்கவில்லையேல், அது பிரச்னையாகும். குழந்தையை சுமக்கும் தாய்க்கு எந்தவித உடல்நல பிரச்னையும் இல்லையேல், கருவைக் கலைக்கலாம்.

கருவைக் கலைப்பது என்பது பாதிக்கப்பட்ட சிறுமி, அவரது பெற்றோரின் முடிவைச் சார்ந்தது. இந்த விவகாரத்தில் அவர்களுக்கு எய்ம்ஸ் உதவ முடியும். இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோருக்கு எய்ம்ஸ் தனது ஆலோசனையை வழங்க வேண்டும். அதனடிப்படையில், கருவைக் கலைப்பது குறித்து அந்தச் சிறுமி முடிவெடுக்கட்டும்.

எனவே, இந்த விவகாரத்தில் ஏற்கெனவே பிறப்பித்த உத்தரவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கையை ஏற்க முடியாது. அத்துடன் 20 வாரங்களுக்கும் மேலான கருவை பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோர் கலைக்க அனுமதிப்பது குறித்து சட்டத் திருத்தம் கொண்டுவருவது குறித்து மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம் என்றனர்.

# மீன் உற்பத்தி: இந்திய அளவில் தமிழகம் முதலிடம்

**கொச்சி, ஏப்.30:** மீன் உற்பத்தியில் இந்திய அளவில் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளதாக இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில்-மத்திய கடல் சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (ஐசிஏஆர்-சிஎம்எஃப்ஆர்ஐ) வியாழக்கிழமை தெரிவித்தது.

6.85 லட்சம் டன் மீன் உற்பத்தியை மேற்கொண்டு குஜராத்தை பின்னுக்குத் தள்ளி தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது.

இதுகுறித்து ஐசிஏஆர்-சிஎம்எஃப்ஆர்ஐ வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: 2025-ஆம் ஆண்டில் இந்தியாவில் கடல்சார் மீன் உற்பத்தி 35.7 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. 2024-ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் கடல்சார் மீன் உற்பத்தி 3 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது.

நாட்டிலேயே அதிகபட்சமாக தமிழ்நாட்டில் 6.85 லட்சம் டன் கடல்சார் மீன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பருவநிலை, நீட்டிக்கப்பட்ட மீன்பிடித் தடைக்காலம் மற்றும் புயல் போன்ற காரணங்களால் 15 சதவீத வீழ்ச்சியுடன் குஜராத் இரண்டாமிடத்துக்கு சென்றது.

6.24 லட்சம் டன் மீன் உற்பத்தியுடன் 2 சதவீத வளர்ச்சியை பதிவு செய்து கேரளம் மூன்றாமிடத்தில் உள்ளது. இதுதவிர பெரிய மாநிலங்களைப் பொருத்தவரை கர்நாடகம் 44 சதவீத வளர்ச்சியையும் மகாராஷ்டிரம் 18 சதவீத வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது.

2025-இல் அதிகம் பிடிக்கப்பட்ட மீன் வளமாக 2.70 லட்சம் டன்களுடன் கானாங்கெளுத்தி மீன் முதலிடத்திலும், 2.57 லட்சம் டன்களுடன் தலைக்காலிகள் இரண்டாமிடத்திலும், 2.53 லட்சம் டன்களுடன் எண்ணெய் மத்தி மீன் மூன்றாமிடத்திலும் உள்ளன.

நாட்டின் மொத்த கடல்சார் உற்பத்தியில் கேரளத்தின் பங்கு 17 சதவீதமாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

# பயங்கரவாதத்தை இந்தியா இனி சகித்து கொள்ளாது

## பாகிஸ்தானுக்கு ராஜ்நாத் சிங் எச்சரிக்கை

**புது தில்லி, ஏப்.30:** பயங்கரவாதத்தை இந்தியா இனி எப்போதும் சகித்து கொள்ளாது என்று பாகிஸ்தானுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மறைமுக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், இதுகுறித்து ராஜ்நாத் சிங் பேசியதாவது:

இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரே நேரத்தில்தான் சுதந்திரம் பெற்றன. ஆனால் இந்தியா இன்று 'ஐ.டி.' என்ற தகவல்தொழில் நுட்பத்துக்கு பெயர் பெற்ற நாடாக அடையாளம் காணப்படுகிறது. ஆனால் பாகிஸ்தானோ, ஐ.டி. எனில் சர்வதேச பயங்கரவாதம் என அடையாளம் காணப்படுகிறது.

பயங்கரவாதத்தை இந்தியா இனியும் சகித்து கொண்டிருக்காது. மத்தியில் ஆளும் பிரதமர் மோடி தலைமையிலான அரசு, பயங்கரவாதம் எந்த வடிவில், எந்த சூழ்நிலையில் வந்தாலும் அதை சகித்து கொள்ளக் கூடாது என்ற உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளது. சிதைந்த மற்றும் திரிந்த மனநிலை கொண்ட இடத்தில் இருந்துதான் பயங்கரவாதம் உருவாகிறது. அது மனிதநேயத்தில் அழுத்தமான கறையை ஏற்படுத்தி விடுகிறது.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்பது தேச பாதுகாப்பு விவகாரத்துடன் சம்பந்தப்பட்டது மட்டுமில்லை. அது மனித நேயத்தின் அடி சித்தாந்தத்தை பாதுகாக்க எடுக்கப்படும் நடவடிக்கையாகும். ஒவ்வொரு மனிதாபிமான செயலுக்கும் நேர் எதிரான கொடூரமான சித்தாந்தத்துக்கு (பயங்கரவாதம்) எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை. பயங்கரவாதம் நீடிக்கும் வரை, அமைதி, வளர்ச்சி, அபிவிருத்தி சாத்தியமாகாது. பயங்கரவாதத்தை நியாயப்படுத்த அதற்கு மத சாயம் பூசுவது அல்லது நக்சல்வா



தம் போன்ற வன்முறை சித்தாந்தத்துடன் தொடர்புபடுத்தும் முயற்சிகள் நடக்கின்றன. இது மிகவும் ஆபத்தானது. பயங்கரவாதிகளை பாதுகாக்கும் செயலாகும். இது அவர்கள் தங்களது இலட்சியத்தை அடைய செய்யும் உதவியாகும்.

பயங்கரவாதம் தேசத்துக்கு எதிரான செயல்மட்டுமல்ல, அதற்கு பல வடிவங்களும் உள்ளன. செயல்படுதல், சித்தாந்தம், அரசியலே அந்த வடிவங்கள் ஆகும். இந்த அனைத்து வடிவங்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே பயங்கரவாதத்தை முறியடிக்க முடியும்.

பகல்ஹாம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை சொந்தமாக குறிக்கோள்களை நிர்ணயித்து மேற்கொண்டது. தாக்கப்படும் இடம், தாக்கப்படும் நேரம் ஆகியவற்றை இந்தியாவே முடிவு செய்தது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது நீண்டகால மோதலுக்கு இந்தியா தயாராக இருந்தது. நமது படைகளுக்கு தேவையான ஆயுத தளவாடங்களும் நீண்ட காலத்துக்கு தயாரித்து தர ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது. அணுஆயுத அச்சுறுத்தலுக்கோ, ஏமாற்று வேலைக்கோ இந்தியா பணியவில்லை. தனது இலக்குகளை இந்தியா வெற்றிகரமாக தாக்கி அழித்தது. இன்றைய புதிய உலக சகாப்தத்தில் தற்போது இந்தியாவும் புதிய இந்தியாவாக மாறியுள்ளது. இந்த புதிய இந்தியா, பயங்கரவாதத்தையும், அதைத் தூண்டி விடுவோரையும் வித்தியாசப்படுத்தி பார்க்காது. இதுதான் நமது பிரதமரின் கொள்கை.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு பிறகு, இந்தியாவிடம் இருந்து ஆயுதங்கள், ஆயுத தளவாடங்கள் வாங்க ஏராளமான நாடுகள் விருப்பம் காட்டுகின்றன. ஆயுத விற்பனை விவரங்களிலிருந்து இதை அறிய முடியும். அதாவது 2025-26-ஆம் நிதியாண்டில் இந்தியா ரூ.38,424 கோடிக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்தது. இது முந்தைய நிதியாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட ஆயுதங்களின் மதிப்புடன் ஒப்பிடுகையில் 62.66 சதவீதம் கூடுதலாகும் என்றார்.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# சார்லஸுக்கு நியூயார்க் மேயரின் கோரிக்கையால் மீண்டும் கவனம் பெற்ற கோஹினூர் வைரம்!



**நியூயார்க், ஏப். 30:** அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் அரசர் சார்லஸைச் சந்திக்கும்போது, கோஹினூர் வைரத்தை இந்தியாவுக்குத் திரும்ப ஒப்படைக்குமாறு அவரிடம் வலியுறுத்தப் போவதாக நியூயார்க் நகர மேயர் ஸோரான் மம்தானி தெரிவித்தார்.

அமெரிக்க பயணத்தில் முதல்கட்டமாக வாஷிங்டன் சென்றடைந்த சார்லஸ், அரசி கமீலாவுடன் அதிபர் டொனால்ட் டிரம்ப் அளித்த விருந்தில் பங்கேற்றதுடன், அமெரிக்க நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்திலும் உரையாற்றினர். தொடர்ந்து, 9-11 பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நியூயார்க் நகருக்கு வந்தார்.

இந்நிலையில், நியூயார்க்கில் சார்லஸுடனான சந்திப்புக்கு முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய ஸோரான் மம்தானி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இவ்விவகாரத்தை அரசரின் கவனத்துக்குக் கொண்டு செல்வது அவசியம் எனக் குறிப்பிட்டார்.

இக்கருத்து கோஹினூர் வைரம் மீது மீண்டும் கவனத்தைத் திருப்பியுள்ளது. இருப்பினும், இருவரின் சந்திப்பின்போது இவ்விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டதா என்பது குறித்த அதிகாரபூர்வத் தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

உலகப் புகழ்பெற்ற 105.6 கேரட் எடையுள்ள கோஹினூர் வைரம், கடந்த 1849-ஆம் ஆண்டு இந்திய அரசர் துலீப் சிங்கால் விக்டோரியா அரசியிடம் வழங்கப்பட்டு, பிரிட்டன் அரச குடும்பத்தின் கிரீடத்தை அலங்கரித்து வருகிறது.

நாட்டின் கலாசார அடையாளமாகக் கருதப்படும் இந்த வைரத்தை மீண்டும் இந்தியாவுக்குக் கொண்டு வர மத்திய அரசு தொடர்ந்து பல்வேறு ராஜீய முயற்சிகளை மேற்கொண்டு வரும் சூழலில், பரிசாகக் கிடைத்ததை திருப்பி அளிக்கப் போவதில்லை என பிரிட்டனும் திட்டவட்டமாக உள்ளது.

# 2025–26 நிதியாண்டில் அந்நிய முதலீடு 9,000 கோடி டாலரைத் தாண்டும்!

**புது தில்லி, ஏப். 30:** 'இந்தியாவின் அந்நிய நேரடி முதலீடு (எஃப்டிஐ), கடந்த 2025–26 நிதியாண்டில் 9,000 கோடி டாலரைத் தாண்டி புதிய உச்சத்தை எட்டும்' என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.



இதுதொடர்பாக மத்திய தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறைச் செயலர் அமர்தீப் சிங் பாட்டியா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அந்நிய முதலீடுகளைக் கவரும் வகையில் மத்திய அரசு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும், உலக நாடுகளுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள், இந்தியாவின் அதிவேக பொருளாதார வளர்ச்சி ஆகியவை உலகளாவிய முதலீட்டாளர்களைப் பெரிதும் ஈர்த்துள்ளன.

கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாதங்களிலேயே, நாட்டின் மொத்த அந்நிய நேரடி முதலீடு 8,800 கோடி டாலரைத் தாண்டியுள்ளது.

மார்ச் மாதத்துடன் முடிவடைந்த முழு நிதியாண்டின் புள்ளிவிவரங்கள் மதிப்பிடும்போது, இது நிச்சயம் 9,000 கோடி டாலரை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.